NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2016

# TAMIL FIRST ADDITIONAL LANGUAGE: PAPER II

Time: 2 hours | 70 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This question paper consists of 7 pages. Please check that your question paper is complete.

2. There are 3 sections in this question paper. Each section has two questions. Every question has 35 marks. Only TWO questions must be answered from the entire paper. You may **NOT** answer both questions from one section. One of your answers must be contextual.

3. Read the instructions to each question carefully.

4. Answer all questions, taking note of choices given.

5. Number your answers exactly as the questions are numbered.

6. All answers must be in **TAMIL**.

7. It is in your own interest to write legibly and to present your work neatly.

---

IEB Copyright © 2016 

## பகுதி ஒன்று

**(சிறிய கதைகள்)**

1. **கீழ்வரும் பகுதியை படித்து, பின்வரும் கேள்விகளுக்கு சரியான விடை தருக.**

புலவர்கள் இவன் பெருஞ்செல்வனாக இருக்கிறானே! ஏதேனும் உதவி செய்வான் என்று சென்றால், 'சோம்பேறிகளாகத் திரியும் உங்களுக்கு ஏன் பொருள் கொடுக்க வேண்டும்' என்று வாய்க்கு வந்தபடி இகழ்ந்துரைப்பான். தானும் தக்கவாறு பொருளைச் செலவிட்டு உண்ண மாட்டான். உண்ண விரும்பும் மனைவி மக்களையும் உண்ண விடமாட்டான். பொருள்கள எல்லாம் பெட்டிகளில் பூட்டி வைத்தான். அப்பெட்டிகள் மீது தானே இராப்பகல் காவலாக இருந்து கொண்டிருந்தான்.

மாணிக்கசாமியிடம் பொருள் இருப்பது எல்லோருக்கும் தெரியும். ஒரு நாள் இரவு தீவட்டிக் கொளைக்காரர்கள் பலர் மாணிக்கசாமியின் வீட்டைச் சூழ்ந்து கொண்டனர்.

(**கொன்றை வேந்தன் விளக்கக் கதைகள்**)

1.1 **சரியான விடை எழுதுக.**

1.1.1 மேற்காணும் வரிகள் எந்த கதையில் எழுதப்பட்டுள்ளது? (2)

1.1.2 மாணிக்கசாமி எந்த ஊரில் வாழ்ந்தான்? (2)

1.1.3 மாணிக்கசாமியின் வயது என்ன? (2)

IEB Copyright © 2016

1.2 **கோடிட்ட இடங்களில் சரியான சொற்களால் நிரப்புக.**

1.2.1 ஏதேனும் _____________ செய்வான் என்று சென்றால். (2)

1.2.2 உண்ண விரும்பும் மனைவி _____________உண்ண விடமாட்டான். (2)

1.2.3 _____________ எல்லாம் பெட்டிகளில் பூட்டி வைத்தான். (2)

1.3 **சரியான விடை எழுதுக.**

1.3.1 இவன் பெருஞ்செல்வனாக இருக்கிறானே என்று கூறியது? (2)

1.3.2 யார் புலவர்களை திட்டியது? (2)

1.3.3 பொருள்களை எங்கே பூட்டி வைத்தான்? (2)

1.3.4 பெட்டிகளுக்கு யார் காவலாக இருந்த்து? (2)

1.4 **எதிர்சொற்கள் தருக.**

1.4.1 உண்டு _________________ (1)

1.4.2 இங்கே _________________ (1)

1.4.3 முன்பு _________________ (1)

1.5 **ஒருமைக்கு பன்மை தருக.**

1.5.1 புலவர் (1)

1.5.2 பொருள் (1)

1.5.3 மாணிக்கசாமியைப்பற்றி, மேற்காணும் வரிகளில் வராத விபரங்கள், சுமார் 10 – 12 வரிகளில் எழுதுக (10)

**[35]**

**அல்லது**

1.6 இரு நண்பர்கள் என்ற கதையைப்பற்றி சுமார் 25 வரிகள் எழுதுக.

**[35]**

**35 marks**

## 2. பகுதி இரண்டு

**(கவிதைகள்)**

2.1 **கீழ்வரும் வரிகளை நன்குப் படித்து பின்வரும் கேள்விகளுக்கு சரியான விடை தருக.**

1 செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது - 101

2 காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது - 102

3 பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது - 103

4 தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார் - 104

(திருக்குறள்: திருவள்ளுவர்)

2.1.1 **சரியான விடை தருக.**

(a) மேற்காணும் வரிகளை எழுதியவர் யார்? (2)

(b) திருக்குறளில் வரும் மூன்று (3) பகுதிகள் யாவை? (2)

(c) திருக்குறளில் மொத்தத்தில் எத்தனை வரிகள் உள்ளன? (2)

2.1.2 **முடிவு செய்க.**

(a) அகர முதல எழுத்தெல்லாம் ஆதி ________________ (2)

(b) கற்றதனாலாய பயனென்கொள் வாலறிவன்______________ (2)

(c) மலர்மிசை ஏகினான் மாண்டி சேர்ந்தார் ________________ (2)

2.1.3 **திருவள்ளுவரைப் பற்றி சுமார் 10 வரிகள் எழுதுக.** (10)

IEB Copyright © 2016

2.2 கீழ்வரும் வரிகளைப் படித்து, பின்வரும் கேள்விகளுக்கு விடை தருக.

பாயும் விழிநீர் பதைக்கும் சிறியவுடல்
விம்மிப் பரிந்துசொலும் வெந்துயர்ச்சொல் கொண்டதுவாய்
அம்மவோ! மற்றாங்கோர் ஆண்குரங்கு தன்னுடனே
ஏதேதோ கூறி இரங்கும் நிலைகண்டேன்
தீதேது? நன்றேது? செய்கைத் தெளிவேது?
அந்தக் கணமே அதையும் குரங்கினையும்
சிந்தக் கருதி உடைவாளில் கைசேர்ந்தேன்
கொன்றுவிடு முன்னே குயிலுரைக்கும் வார்த்தைகளை
நின்று சற்றே கேட்பதற்கென் நெஞ்சம் விரும்பிடவும்
ஆங்கவற்றின் கண்ணில் அகப்படா வாறருகே
ஓங்கு மரத்தின்பால் ஒளிந்துநின்று கேட்கையிலே
பேடை குயிதனைப் பேசியது 'வானரரே!
ஈடறியா மேன்மையழ கேய்ந்தவரே! பெண்மதான்
எப்பிறப்புக் கொண்டாலும் ஏந்தலே! நின்னழகைத்
தப்புமோ? மையல் தடுக்கும் தரமாமோ?
மண்ணிலுயிர்க் கெல்லாம் தலைவரென மானிடரே

(குயில் பாட்டு)

2.2.1 இக் கவிதையை எழுதியவர் யார்? (1)

2.2.2 இக் கவிதையில் எந்த இரண்டு விளங்குகளைப்பற்றி எழுதியுள்ளது? (2)

2.2.3 எந்தப் பறவையைப் பற்றி எழுதியுள்ளது? (1)

2.2.4 **கோடிட்ட இடங்களில் சரியான சொற்களால் நிரப்புக.**

(a) சிந்திக் கருதி ______ கை சேர்ந்தேன். (1)

(b) தப்புமோ? ______ தடுக்கும் தரமாமோ? (1)

2.2.5 எதிர்சொல் தருக.

(a) முன்னே (1)

(b) மேல் (1)

2.2.6 மாடனைப் பற்றி சுமார் 5 வரிகள் எழுதுக. (5)
**[35]**

அல்லது

2.3 திருவள்ளுவரைப் பற்றி சுமார் 30 வரிகள் எழுதுக. **[35]**

**35 marks**

IEB Copyright © 2016 

## பகுதி மூன்று

**(நாடகம்)**

3. கீழ்வரும் வசனத்தை அடிப்படையாக கொண்டு, பின்வரும் கேள்விகளுக்கு விடை தருக.

**சௌதரி;** இன்ச்பெக்டர்; ஜெகனை கைது செய்யுங்கள்

**இன்ச்பெக்டர்;** என்ன சொன்னிங்க? இது எண்மையா?

**சௌதரி;** ஜெகன் கையிக்கு விளங்கை மாட்ட சொன்னேன்.

**ஜெகன்;** என் பின்னாலேயே வந்து குத்தி விட்டீங்களே.

**சௌதரி;** இல்லை! நீ முப்பது ஆயிரம் ரூபா பணத்தை திருடிவிட்டு, இங்கே நாடகம் போடுகிறாயா?

(தஙகபதககம: சிவாஜி கணே சன)

3.1 **சரியான சொற்களால் நிரப்புக.**

3.1.1 ஜெகனை _________ செய்யுங்கள். (1)

3.1.2 என் _______ வந்து குத்தி விட்டீங்களே! (1)

3.2 **சரியான விடை தருக.**

3.2.1 இந்த நாடகத்தின் தலைப்பு என்ன? (2)

3.2.2 இந்த நாடகத்தில் லட்சுமி யார்? (2)

3.2.3 பல ஆண்டுகளுக்கு ஜெகன் எங்கே வாழ்ந்தான்? (2)

3.2.4 பணத்தை எங்கே திருடினான்? (2)

3.2.5 இந்த நாடகத்தின் கருத்து என்ன? (2)

3.3 **எது உண்மை, எது உண்மை அல்ல?**

3.3.1 ஜெகன் சிறு வயதிலும் திருடினான். (2)

3.3.2 கால போக்கில் மாறி விட்டான். (2)

3.3.3 சொந்த தந்தையே அவனை சுட்டு கொன்றார். (2)

IEB Copyright © 2016

3.4 எதிர்ச்சொல் தருக.

3.4.1 உண்மை (2)

3.4.2 முன்னால் (2)

3.5 ஆண்பாலுக்கு பேண்பால் தருக.

3.5.1 மகன் (2)

3.5.2 கணவன் (2)

3.6 ஜெகனை பற்றி 10 – 12 வரிகள் எழுதுக. (10)
**[35]**

அல்லது

3.7 இந்த நாடகம் மிக சிறந்த குடும்பக் கதை. இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு சுமார் 30 வரிகள் எழுதுக. **[35]**

**35 marks**

**Total: 70 marks**

IEB Copyright © 2016